**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(15.11.2024 முதல் 19.11.2024)**

**அறிக்கைஎண் 66/2024** **தேதி. 14.11.2024**

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

நாகப்பட்டினம் மாவட்டத்தின் 12.11.24 முதல் 13.11.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 31 - 32 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 25 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 98 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 - 8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை நாகப்பட்டினம் (15.11.2024 முதல் 19.11.2024)

| ந்த வார வானிலை (12.11.2024 முதல் 13.11.2024) | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 19.11.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 12/11 | நாள்-2 13/11 | தேதி | நாள்-1 15/11 | நாள்-2 16/11 | நாள்-3 17/11 | நாள்-4 18/11 | நாள்-5 19/11 |
| 0.0 | 3.7 | மழை (மி.மீ) | 31 | 26 | 4 | 8 | 12 |
| 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 28 | 27 | 27 | 27 |
| 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 22 | 22 | 22 |
| 7 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 6 | 7 | 7 |
| 77 | 98 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 65 | 85 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 7 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 10 | 14 | 20 |
| வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | வடக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட வட கிழக்கு | வட வட கிழக்கு |

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 15.11.2024 முதல் 19.11.2024 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 24 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வட வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| | | வரும் நாட்களில் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| நெல் | நடவு வயல் | சம்பா நெற்பயிரில் 20 - 30 நாட்களுக்குள் ஒரு கைக்களை எடுக்கவும். |
| | | இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (புழுக்களால் சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், அதிக அளவு தழைச்சத்து உரத்தை இடுவதை தவிர்க்கவும், களைகளை கட்டுப்படுத்தவும் மற்றும் டிரைக்கோகிரேம்மா கிலோனிஸ் @ 2 CC நாற்ப்பதாயிரம் முட்டை ஒட்டுண்ணிள்/ ஏக்கர் என்ற அளவில் பயன்னடுத்தவும். பாசலான் 35 EC 1500 மிலி எக்டருக்கு அல்லது கார்போசல்பான் 6 % G குருனையை எக்டருக்கு 16.7 கிலோ தூவவும் அல்லது கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50 % SP யை எக்டருக்கு 1 கிலோ தூவவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கறவை மாடுகளை பால்காய்ச்சல் நோய் தாக்கலாம். இதனை தவிர்க்க மாடுகளுக்கு 15 – 30 கிராம் கனிம கலவையை கருவுற்ற மாடுகளுக்கு கொடுக்கவும் |
| | | இரவு நேரங்களில் குளிர் காற்றிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க, கொட்கையை சுற்றிலும் படுதா கட்டுவது நன்று. உடல் வெப்பநிலையை சமாளிக்க புண்ணாக்குடன் 100 கிராம் வெல்லம் சேர்த்து குடிநீரில் தரவேண்டும். தாதுஉப்பு கலவை ஒரு பசு மாட்டிற்ககு 30 கிராம் வீதம் குடிநீரில் தர வேண்டும். |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**